# அனல்

2014

புதுமலர்: 11 இதழ்: 01 தை - மாசி

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

- ரோமர் 12:11 -

ஆசிரியர்:

வே.மகாராஜா

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.01.2014

2014

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கவிதை - வா வா புத்தாண்டே...
- கதையும் கற்றதும் - துரோகம் பண்ணாதே!
- வாலிபர் வளாகம் - உண்மை இது தான்!
- வினா விடை - 61
- உனக்குத் தருகிறேன்
- பெண்கள் பக்கம் - ஒரு ஸ்திரி கேட்டுக்கொண்டிருந்தாள்
- நற்செய்திப்பகுதி - பாரம் சுமக்கும் ஆத்துமாவே பரமிணிடமிருந்து ஓர் செய்தி
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 59
- இயேசு எதற்காக
- அருட்பணியாளர் சரிதை - ஆஸ்வால்டு சேம்பர்ஸ், ஜான் வில்லியம்ஸ்
- அனலின் புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group.**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்,
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

2014

Happy New Year 2014

# 2014 வாக்குத்தத்தம்

## "சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்".

– ஏசாயா 12:6 –



# அனலின் குரல்

# எழுந்து வா!

**அன்பின் அனல் வாசகர்களுக்கு!**




இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் அன்பின் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்...

**எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான் - லூக்கா 15:20**

தகப்பனைவிட்டு தூரம் போகும் காலமாய் இக்காலம் உனக்கு இருக்கக் கூடாது; தகப்பனை நெருங்கிச் சேரும் காலமாய் இக் காலங்கள் இருக்கட்டும்.

ஆண்டவராகிய இயேசு; ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன், தன் தகப்பனிடம் தனக்கு வரவேண்டிய ஆஸ்தியின் பங்கை வாங்கிக் கொண்டு தூர தேசம் போனான். பின்பு துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்தான். ஆஸ்திகளெல்லாம் அழிந்த பின்பு தன் அன்றாட ஆகாரத்திற்கே அவன் கஷ்டப்பட வேண்டியிருந்தது. பன்றிகளின் தவிட்டினால் தன் வயிற்றை நிரப்ப ஆசையாய் இருந்தான் என்றார் - **லூக்கா 15:11-16.**

**லூக்கா 15:17**ம் வசனத்தில்; அவனுக்கு புத்தி தெளிந்த போது, தன் தகப்பனிடம் எழுந்து போவேன் என சிந்தனை செய்தான். முன்பு அவனுடைய சிந்தனை தகப்பனை விட்டுப் போவேன்; ஆஸ்தியைப் பிரிப்பேன், என் விருப்பம் போல வாழுவேன். அதாவது தகப்பனின் உறவை உடைக்கும் தீர்மானத்தை, பிரிவினையின் தீர்மானத்தை, அசுத்தத்தை நடப்பிக்கும் தீர்மானத்தை, தன் மனம் போன போக்கில் வாழும் தீர்மானத்தை, பாவத்தை செய்யும் தீர்மானத்தை எடுத்தான்.



ஆனால் இப்போதோ! நான் எழுந்து என் தகப்பனிடம் போவேன். அதாவது தகப்பனிடம்

போவேன், தகப்பனிடம் மன்னிப்பு கேட்பேன், நீர் விரும்புகிறபடி என்னை நடத்தும். அதாவது தகப்பனிடம் சேரும் தீர்மானத்தை, தகப்பனுடன் உறவு கொள்ளும் தீர்மானத்தை, பரிசுத்தமாய் வாழும் தீர்மானத்தை, நல்லதைச் செய்யும் தீர்மானத்தை எடுத்தான். கடந்த ஆண்டில் எப்படி வாழ்ந்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். என் பரம தகப்பனை விட்டு தூரமாய் நான் இருக்கிறேன் என நீங்கள் உணர்ந்தால் அவரை நோக்கி அவர் அருகில் வாருங்கள்.

**அளவிட முடியாத அன்பையுடைய தேவன் உன்னை அணைக்க ஆயத்தமாக இருக்கின்றார்.** எப்போது என் குமாரன் வருவான் என எதிர்பார்த்துக் கொண்டேயிருந்த தகப்பன் ஓடிச் சென்று அவனை அணைத்தார். நீ தூர இருக்கும் போது எப்போது மனந்திரும்புவாய் என தேவனுடைய இருதயம் உன்னை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கின்றது. உன் அசிங்க வாழ்வை, உன் தகப்பனாகிய தேவனையும், உன்னையும் பிரித்த சகல காரியங்களையும் விட்டு உன் தகப்பனிடம் எழுந்து வா.

**2014ஆம் ஆண்டில் நீ இழந்ததை மறுபடியும் உனக்குத் தருவார். உன் நிமித்தம் தேவ சமூகத்தில் சந்தோஷம் உண்டாகட்டும். தேவனுடைய பிள்ளை என்ற ஸ்தானத்தைப் பெற்றுக் கொள். கர்த்தர் இந்த ஆண்டில் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

— ஆசிரியர் —



# வா வா புத்தாண்டே....

வா வா – புத்தாண்டே வா வா
நம் வாழ்வில் இனிமையாய் வா வா
வருடங்கள் உம்முடைய கணக்கில்
வரட்டும் நீ தருவதெல்லாம் எமக்கும்

தேடுகிறான் மனிதன் எதெதையோ
நாடுகிறான் தன் மனம் போனதை
நாடவும் தேடவும் வேண்டும் மனிதன்
நாதன் உம் நாமத்தை இவ்வாண்டில்

அர்ப்பணிக்கிறான் எதெதற்கோ
அங்கலாய்க்கிறான் அநித்திய சந்தோஷத்திற்கு
விட்டிடு உன் வீணான சிந்தையை
விரும்பிடு விண்ணவரின் செயலினை

ஓடிப்போன ஆண்டுகளில் உம்பாட்டுக்கு ஓடினாய்
தேடியது எல்லாம் போனதோ தெரியவில்லை
போனது நிம்மதி; பறந்தது சமாதானம்
வந்ததோ ஏமாற்றம் அதனாலே சீற்றம்

அழைப்பவரின் சத்தம் கேட்கிறது 2014இல்
பாதை இதுவே நட இதிலே
சாயாதே இடம், போகாதே வலம்
படியிடு முழங்கால்; பணிந்திடு தேவனை

துன்பமோ இன்பமோ துவளாதே
துக்கத்தை சந்தோஷமாக்க; துன்பத்தை இன்பமாக்க
நல் உபதேசம் தந்து நடத்துவார்
தேவன் இவ்வாண்டு முழுமையும்...




# கதையும் கற்றதும்...

# துரோகம் பண்ணாதே!

**அன்பின் அனல் வாசகர்களுக்கு! இன்பராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.**

அன்று வந்த தொலைபேசி அழைப்பினால் உண்மையிலேயே பீற்றர் நிலைகுலைந்து தான் போய்விட்டார். *"வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததைப் போன்று உணர்ந்து வெறுமையின் வெளிக்குள் சிக்கித் தவித்தார்"*. தனது நம்பிக்கையின் அச்சாணி உடைந்து சக்கரங்கள் கழன்று போனதைப் போன்று ஏக்கப் பெருமூச்சோடு சாய்மனைக் கதிரையில் அமர்ந்தார். ஆம்! இவ்வாறு பீற்றர் வேதனைப்படுவதற்கு காரணம், அவர் இதுவரை தன் முழு நம்பிக்கையும் அன்பும் வைத்து வளர்த்துவிட்ட அலெக்ஸ் தான்.

மிகுந்த தேவ பக்தியும் இரக்கமும் நிறைந்தவர் தான் பீற்றர். இவரிடம் யார் உதவி கேட்டு வந்தாலும் முகம் கோணாமல் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருபவர். பீற்றர் ஒரு அச்சுக்கூட உரிமையாளராக இருந்தார். அவரது அச்சுக்கூடத்தில் பலர் வேலை செய்து வருகின்றார்கள். இவர் தனக்கு கீழாக வேலை செய்பவர்களிடம் அன்பாகவும் கரிசனையாகவும் நடந்து கொள்வார்.

பீற்றின் அச்சுக்கூடத்திற்கு ஒரு நாள் மதியம் களைத்து சோர்ந்து வந்து நின்றவன் தான் அலெக்ஸ். ஆம் அவன் வேலை தேடி அங்கே வந்திருந்தான். ஆனால் அவன் வந்த காலப்பகுதியில் அவனுக்கு வேலை வழங்கக்கூடிய நிலையில் வெற்றிடம் இருக்கவில்லை. அத்துடன் அலெக்ஸுக்கு அச்சுக்கூட வேலையில் முன் அனுபவமும் இருக்கவில்லை. ஆனாலும் அவன் மேல் இரக்கப்பட்டு அவனை வேலையில் இணைத்துக் கொள்ள சம்மதம் தெரிவித்து அடுத்த நாள் காலையில் வருமாறு அனுப்பி வைத்தார் பீற்றர். அவ்வாறே அலெக்ஸும் அடுத்த நாள் காலையிலேயே வேலைக்கு வந்திருந்தான்.

அவனுக்கு வேலையில் முன் அனுபவம் இல்லாமையால் அவனை முதலாவது புத்தகங்களைக் கட்டும் பகுதியில் வேலைகளை கற்றுக் கொள்ளும்படி இணைத்துக் கொள்ளப்பட்டான். அவனுக்கு வேலையின் ஒவ்வொரு பகுதிகளும் நன்றாக கற்றுத்தரப்பட்டது. அவனும் தனது விடா முயிற்சியினால் அப் பகுதியின் சகல வேலைகளையும் கற்றுக் கொண்டான்.

இதனைப் பார்த்த பீற்றருக்கு ஒரே மகிழ்ச்சி. அவன் ஆரம்பத்தில் வந்த நிலைக்கும் இப்போது வேலைகளைக் கற்றுக் கொண்டு ஒரு வேலையாளாய் இருப்பதனையும் நினைத்து தன்னைத் தானே மெச்சிக் கொண்டார். அத்துடன் அவனை அச்சு இயந்திரப் பகுதிக்கு மாற்றி அந்த வேலைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று சிந்தித்தார். **பாவம்! பீற்றருக்கு அலெக்ஸ் பின் நாட்களில் எப்படி மாறுவான் என்று அப்போது தெரிந்திருக்கவில்லைத்தான்.** எனவே அடுத்த கட்டமாக அலெக்ஸை அச்சு இயந்திரப்பகுதிக்கு மாற்றினார். அங்கே பீற்றர் தானே நேரடியாக நின்று அலெக்ஸூக்கு வேலைகளை சொல்லிக் கொடுத்தார். நாட்கள் காலவோட்டத்தோடு ஓடிக்கொண்டிருந்தது. இப்போது அலெக்ஸே அச்சுக்கூடத்தின் சகல வேலைகளையும் செய்யக்கூடியவனாக மாற்றம் பெற்றான். பீற்றரும் அவன் மேல் தனது முழு நம்பிக்கையையும் வைத்தார். இதனால் பீற்றர் சகல வேலைகளையும் அவனிடமே பொறுப்புக் கொடுப்பார். அவனும் அவர் நினைத்ததை போல திறம்பட வேலைகளைச் செய்து வந்தான். இவ்வாறு சில வருடங்கள் தொடர்ந்து ஓடியது. இப்போது; அச்சுக்கூடத்தை மேற்பார்வை செய்வதை அலெக்சிடம் ஒப்படைத்துவிட்டு தனது முதுமையின் நிமித்தம் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே என்று பீற்றர் சிந்தித்தார். எனவே அவனுக்கு கணக்கு விடயங்கள் அனைத்தையும் கூறி பணங்களை வங்கியில் வைப்பிலிடுவதற்கும் அவனையே அனுப்பி வைப்பார்.

ஆனால் அலெக்ஸோ பீற்றரின் கள்ளம் கபடம் அற்ற மனநிலையை புரிந்து கொள்ளாதவனாய், நன்றி அறிதல் அற்றவனாய் காரியங்களைச் செய்தான். ஆம், அவன் பீற்றருக்கு தெரியாமல் பணத்தில் கையாடல் செய்து வந்தான். அத்துடன் அவருக்கு தெரிவிக்காமலேயே வேறொரு அச்சுக்கூடத்தை கொள்வனவு செய்து அதில் வேலைகளை ஆரம்பித்திருக்கின்றான் என்றும் இவரைக் குறித்தும் இவரது வாடிக்கையாளர்களுக்கு தவறாக கூறியிருக்கின்றான் என்று இவரது வாடிக்கையாளர் ஒருவர் கூறிய தொலைபேசி அழைப்பினாலேயே பீற்றர் இவ்வாறு நிலைகுலைந்து அமர்ந்திருந்தார்.

அவரிடம் இதுபற்றி அவன் பேசியிருந்தால் அவராகவே புதிய அச்சுக்கூடம் ஆரம்பிப்பதற்குரிய ஆலோசனைகளையும் காரியங்களையும் செய்து கொடுத்திருப்பார். பீற்றருக்கு வருத்தம் ஏற்பட்டதற்கு காரணம், அவன் புதிய அச்சுக்கூடம் அமைத்தமையால் அல்ல, மாறாக அவன் தன் மேல் நம்பிக்கை வைக்காமல் தனக்கு

தெரியாமல் காரியங்களைச் செய்து விட்டானே என்று நினைத்த போது தான் அவரது மனது வலித்தது.
**இதனையெல்லாம் அவர் சிந்தித்த போது அவருக்கு கடந்து ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் கேட்ட பிரசங்கம் நினைவுக்கு வந்தது (11தீமோத்தேயு 3:1-6)**

ஆம் பிரியமான நண்பர்களே, இக் கடைசிக் காலத்தில் நானும் நீங்களும் இப்படியான எத்தனையோ துரோகத்தனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கணவன் - மனைவி, நண்பர்கள் - உறவுகள், முதலாளி – தொழிலாளி என எத்தனையோ நம்பிக்கையின் கழுத்தறுப்புக்கள் எம்மைச் சுற்றிலும் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றது. ஆனால் இவைகளுக்கு மத்தியில் வாழும் நாம் எம்முடைய சாட்சியுள்ள முன்னுதாரணமான வாழ்க்கையினால் இப்படிப்பட்ட மக்களை கிறிஸ்து பக்கம் திருப்ப இப் புதிய ஆண்டில் உறுதி பூணுவோமாக.



வை.விமல்

# வினா விடை - 60

## சரியான விடை எழுதியவர்கள்

01. நா.சிவபாக்கியம் - காரைநகர்
02. வி.ஜெயாழினி - பாண்டவெட்டை
03. த.சிவாஜினி - காரைநகர்
04. எம்.கிஷோரா - நாவற்குழி
05. செ.மேகலா - காரைநகர்
06. வி.தயாழினி - பாண்டவெட்டை
07. அ.கிருசாந்தன் - காரைநகர்
08. அ.துர்க்கா - காரைநகர்
09. அ.கம்சிகா - காரைநகர்
10. அ.எஸ்தர் - காரைநகர்
11. நா.கிறிஸ்தீனா - காரைநகர்
12. பி.கஸ்தூரி - மானிப்பாய்
13. எம்.பிரான்சிஸ் - மானிப்பாய்









**இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உங்களுக்கு உரித்தாவதாக.**

**தே**வ கிருபையினாலும், தேவ தயவினாலும் கடந்த ஆண்டை (2013) கடந்து வர தேவன் செய்த பெரிதான கிருபைக்காக தேவனிற்கு நன்றி கூறுகின்றேன்.

**"கிறிஸ்து உங்களில் உருவாக வேண்டும்"**

இதுவே என்ஜெபமாக இருக்கின்றது உங்களிற்காக. அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் நிருபத்தில் எழுதுகின்றார்; **என் சிறு பிள்ளைகளே கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களிற்காக மறுபடியும் கர்ப வேதனைப்படுகின்றேன்** மெய்யான தேவ பிள்ளையின் மெய்நிலை கிறிஸ்து தன்னில் உருவாவதற்கு சம்பூரணமாய் கையளித்ததாகவே காணப்படும் (இருக்க வேண்டும்). **கள்ள உபதேசங்களினால் நிலை குலைந்து தேவவார்த்தையின் படி நடவாமல் சந்தேகம் கொள்ளும் மக்கள்ஆண்டவரை அறிந்து ஏற்ற பிள்ளைகள் தேவனையும் அவரது வார்த்தையையும் விட்டுத்திரும்பும் போது (புத்தியில் அந்தகாரப் பட்டு) வேதனையோடும், கண்ணீரோடும் திருச்சபை மக்களிற்கு பெருந்தொனியாய் முழங்குகின்றார் ஆவியானவர். உங்களில் கிறிஸ்து உருவாக வேண்டும் என்பதாக.**

உங்கள் ஜீவிய காலத்தில் கிறிஸ்து இயேசுவுக்கான வழியில் நடக்க எத்தகைய தீர்மானங்களை எடுத்திருக்கின்றீர்கள்?

அவைகளில் எவற்றை செயல் வடிவில் நடைமுறைப்படுத்தியிருக்கிறீர்கள்?

கிறிஸ்து உன்னில் உருவாக நீ எடுக்க வேண்டிய சில உண்மைகள்:

## 01. நேர்மையாய் மனந்திரும்ப வேண்டும்:-

வெறுமனே மனஸ்தாபப்படுதல் மனம் திரும்பலாகிவிடாது. நான் தெற்கை நோக்கி போய்க்கொண்டிருக்கையில், வடக்கே போகும்படி மனதில் தீர்மானம் எடுத்தால் நான் வடக்கு திசைக்கு திரும்பி அந்த திசைக்கு போக வேண்டும். மாறாக நான் வடக்கை நோக்கி போகிறேன் என்று தெற்கை நோக்கிப் போனால் நன் உண்மையில் வடக்கே போகும்படி திரும்பவில்லை என்றுதான் அர்த்தம்.

### மனந்திரும்புதல் என்பது:

**அ. பாவத்தை விட்டு திரும்புதல்**

**ஆ. தேவனை நோக்கித் திரும்புதல்**

இவை இரண்டும் அவசியம். பாவத்தை விரும்பி விரும்பி மறைவாகவும், பகிரங்கமாகவும் செய்து செய்து மனம் திரும்பினேன் என்று சொல்வது மகா பயங்கரமானதும் தேவ கோபத்திற்கு வழியை அமைத்து விடுவதுமாக அமைந்து விடும். எச்சரிக்கை.

**இயேசு சொன்னார்: மனம் திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்கும்படியாய். கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (மத்தேயு 3:8-9)**

**ஆகவே உன்னுடைய மனந்திரும்புதல் நேர்மையானதாகவும், பகிரங்கமானதாகவும் இருக்கட்டும். மறுபடியும் சொல்கிறேன்: நேர்மையானதாகவும், பகிரங்கமானதாகவும் இருக்கும் போது கிறிஸ்து உன்னில் உருவாகுவார் நண்பனே!.**

## 02. சிட்சைக்கு முகம் கொடுக்க வேண்டும்:-

சிட்சையை மேற்கொள்ளும் மேலான அதிகாரத்திற்கு (போதகருக்கு, தலைவருக்கு, ஆசிரியருக்கு, முதலாளிக்கு, ஜமானுக்கு, தகப்பனுக்கு, தாய்க்கு. . . .) கீழ்ப்படிந்து இருத்தல், சாந்தமாய் நடத்தல் மிக மிக அவசியம்.

சத்திய வேதப் போதனையின் படி சிட்சிக்கப்பட அவசியமானவர்கள் சபையின் சிட்சைக்கு உட்படும்போது (அதிகாரியின்) சபையை விட்டு வெளியேறி வேறு சபைக்கு போவதோ, அல்லது வேறு மாவட்டங்களிற்கு செல்வதோ, அல்லது வெளி நாட்டிற்கு செல்வதோ,

பிரச்சினைக்கு முகம் கொடுக்காமல் தப்பித்துக் கொள்வது கோழைத்தனத்தைக் காட்டுவதுடன் ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமையையும் காட்டுகின்றது.

ஒரு சபை வேதாகம அடிப்படையில் சிட்சித்த ஒருவரை இன்னோர் சபை எடுத்துப் பயன்படுத்தும் போது அவன்(ள்) உண்மையாய் மனந்திரும்ப வாய்ப்பே இல்லை. இல்லாமலே போய்விடுகிறது. சிலர் எப்படியாவது ஊழியத்திற்கு வரவேண்டும் என்று பிரயாசப்படுகிறார்களே தவிர வேனோடுள்ள உறவு முறைக்குள் மறுபடியும் சீராய் (நசல் இல்லாமல்) நேர்மையாய் மீள எழுப்பப்படுவதைக் குறித்து எடுக்கும் கரிசனை மிக மிக குறைவே. சிட்சைக்கு ஊடாக நீ செல்லும் போது மாத்திரமே தேவ திட்டம் உன்னில் நிறைவேறும்.

## 03. பரிசுத்த வாழ்க்கைக்கு கையளிக்க வேண்டும்:-

**"கையளிப்பது"** என்பது மனப்பூர்வமாக குறித்த காரியம் நிறைவேறுவதற்கு எந்தவிதமான மறுப்பும், மன வருத்தமும் இன்றி உற்சாகத்துடனும், முழு மனதுடனும் அற்பணிப்பதையே சுட்டி நிற்கின்றது.

**நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே (1பேதுரு 1:16).**

**நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் (1பேதுரு 1:15).**

**பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள் (எபிரெயர் 12:14)**

**உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு (1தீமோத்தேயு 4:12).**

வாலிப காலத்தின் நடக்கை (நீ செய்யும்படியாய் கையளித்திருக்கும் காரியம்) உன் மீதமுள்ள வாழ் நாட்களில் பிரதிபலிக்கும் தேவன் விரும்பும் தூய/பிழையற்ற பரிசுத்தத்திற்கு சம்பூரணமாய் நீ உன் வாழ்வை விட்டுக் கொடுக்க வேண்டும். இன்று கீழ்ப்படிவாயா தேவ சித்தம் செய்ய?

ஆவியானவரின் ஆளுகைக்கு தன்னையும், தன் சித்தத்தையும், சுயத்தையும் தொடர்ச்சியாக ஒப்புக் கொடுத்து அவரது ஆளுகைக்குள் அவரது வழிநடத்தலின்படி ஜீவிக்க ஒப்படைப்பதே மேலான வாழ்வாகும். தன் சுய பெலத்தை சாராமல் தேவனில் தங்கி வாழ தாழ்மையுடன் ஒப்படைப்பான்.

## பரிசுத்த வாழ்விற்கு கையளிப்பது என்பது:

கிறிஸ்துவின் சாயலை தேவ ஆவியானவர் உன்னில் ஏற்படுத்த இடமளித்துக் கொண்டு இருப்பதேயாகும்.

**உண்மை இது தான்: இயேசு கிறிஸ்து உன்னில் உருவாக வேண்டும்.**

அப்பொழுது மாத்திரமே நீ மெய்யான தேவ பிள்ளையாய் சாட்சியாய் வாழ முடியும். இருளிலுள்ள ஆயிரங்களை ஒளியிடத்தில் நடத்த முடியும்.

**உன்னை உருவாக்க தன்னையே கல்வாரிச் சிலுவையில் சிதைத்தவரை சிறிதும் ஐயம் இன்றி ஏற்று அவர் வழியில் நடப்பாயாக...**

**போதகர் வேதநாயகம் சுமணன்**

## வினா விடை - 01

01. "மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும்" என்று ஜெபித்தவன் யார்?

× 02. "என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன்" என்றது யார்?

† 03. கடக்கக் கூடாத ஆறுகளையும் வற்றிப்போகப்பண்ணி, இருளுக்கும் முடிவுண்டாக்குகிற மனுஷன் யார்?

9/2014 04. மனுஷனுடைய இருதயத்தை ஒடுக்குவது எது?

× 05. இயேசுவின் அற்புதங்கள் எத்தனை? 36

1/2019 06. "நான் மனுஷனைப் பார்த்தா அங்கலாய்க்கிறேன்" என்றது யார்?

× 07. வேதாகமத்தில் "கர்த்தர்" என்ற வார்த்தை எத்தனை தரம் வருகிறது? 6853

2018 08. "மனுஷனுக்கேற்ற புத்தி எனக்கு இல்லை" என்றது யார்?

× 09. எந்த மனுஷனை கர்த்தர் அருவருக்கிறார்?

× 10. ஒரு மனுஷன் எதற்குத்தக்கதாக புகழப்படுவான்?




# உனக்குத் தருகிறேன்

**தா**யின் வயிற்றிலிருந்து பிறந்தது முதலே சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷன். எப்போதும் இவனால் மற்றவர்களுக்குப் பாரமும் வேதனையும். கூடவே அவனுக்கும் வாழ் நாள் முழுக்க முழுக்க வேதனையும் துன்பமும் தான்.

தேவாலய வாசலில் நாள் தோறும் அவனை கொண்டு வந்து வைப்பார்கள். பிரதான வாசலிது. தேவாலயத்தின் மேன்மையாய், பெருமையாய் போற்றப்படும் நுழைவாயிலில் ஓர் அலங்கோலமும் அவலட்சணமுமான தோற்றத்தில் ஓர் மனிதன் வாழ்நாளில் சரியாக ஒன்றையும் பெற்றிராதவன். அவனது எண்ணம் ஏக்கம்

விடுவேன். தன் கண்களில் தென்படும் ஒவ்வொரு மனிதனிடமும் அவனது பார்வை ஏதாவது பணம் தருவார்களா? என்பதே.



**ஓர் நாள் விழயலுக்கான மங்கள மான செய்தி:** தேவாலயத்திற்கு வந்த இரண்டு தேவனுடைய ஊழியர்களிடம்; சப்பாணி. அவர்களை நோக்கி ஐயா பிச்சை... பிச்சை... என்று கதறும் சத்தம். கிறிஸ்துவின் ஊழியர்கள், எங்களிடம் உனக்குத் தருவதற்கு பொன்னும் வெள்ளியும் இல்லை. என்னிடத்தில் உள்ளதை **உனக்குத் தருகிறேன்**, நசரேயனாகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று தூக்கிவிட்டான். உடனே அவன் கால்களும், கரடுகளும் பெலன் கொண்டது.

**இதைப்படிக்கும் அன்பு நண்பனே, உன் வாழ்வில் எப்பேற்பட்ட பெலவீனமான செயல்கள், நடக்க முடியாமல் இருக்கும் காரியங்கள், நீ சோர்ந்து போய் இருக்கின்றாயா? பயப்படாதே! வானிலும் பூவிலும் மேலான நாமம், இயேசுவின் நாமம். அந்த நாமத்தைப் பற்றிக் கொள். அப்போது சந்தோசமான எதிர்காலம், சாட்சியான வாழ்வு உனக்குக் கிடைக்கும்.**

ரோமா



# ஒரு ஸ்திரி கேட்டுக் கொண்டிருந்தாள்!


## பெண்கள் பக்கம்

*எங்கே? எதை? யாரிடம்? கேட்டுக் கொண்டிருந்தாள்??*

பெண்கள் அதிகம் பேசுபவர்கள் என்ற எண்ணம் எல்லாருடைய எண்ணத்திலும் உண்டு. ஆனால் இங்கு நாம் **அப்போஸ்தலர் 16:14 அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்: பவுல் சொல்லியவைகளைக்கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்.** "லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரி கேட்டுக்கொண்டிருந்தாள்" என்று பார்க்கின்றோம்.

அவள் என்னத்தை கேட்டுக் கொண்டிருந்தாள்? பவுல் சொல்லியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள். **இவள் ஒரு சாதாரண பெண் அல்ல, அவள் இரத்தாம்பரம் விற்கும் தொழிலைச் செய்பவள். அரச குலத்தினரும், பெரும் செல்வந்தர்களும் மட்டுமே இராம்பர ஆடையை அணிவார்கள்.** இதனை வியாபாரம் செய்பவள் தான் இந்த லீதியாள்.

**அப்போஸ்தலர் 16:13 ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்.** பவுல் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடி வந்த ஸ்திரிகளுக்கு உபதேசித்தார். அக்கூட்டத்தில் லீதியாளும் இருந்து பவுல் சொல்பவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள். "கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தார்".



**எரேமியா 17:9 எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளது**

**மாயிருக்கிறது. அதை அறியத்தக் கவன் யார்?** லீதியாளின் இருதயம் பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தருளினார். **இருதயத்தை அறியத்தக் கவர் கர்த்தர். இருதயத்தை திறக்க வல்லவர் கர்த்தர் ஒருவரே.**

> “ அவள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அவள் தேவ மனிதர்களுடன் ஐக்கியமாய் இருக்க விரும்பியதால் அவர்களை தன் வீட்டிலே தங்கியிருங்கள் என்று வருந்திக் கேட்டாள்.

லீதியாள் வியாபார வேலையில் பரபரப்பாய் ஈடுபடுகின்றவள். ஆனால் தேவ வார்த்தையைக் கேட்பதற்காய் நேரத்தை ஒதுக்கி தேவ வார்த்தையை உபதேசிக்கின்ற இடத்திலும் ஸ்திரிகள் கூடி ஜெபிக்கின்ற இடத்திலும் அமைதியாய் உட்கார்ந்து தேவ வார்த்தையை கேட்டதின் நிமித்தம்: அப்போஸ்தலர் **16:15 அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்.** அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவளுடைய ஐக்கியம் முன்பு வியாபாரிகளுடன் இருந்திருக்கலாம். ஆனால் அவள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அவள் தேவ மனிதர்களுடன் ஐக்கியமாய் இருக்க விரும்பியதால் அவர்களை தன் வீட்டிலே தங்கியிருங்கள் என்று வருந்திக் கேட்டாள்.

ஒரு நேர்முக பரீட்சைக்கு (Interview) பல பெண்கள் கூடி இருந்தார்கள். அங்கு அவர்களுக்கு பல அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டது. அதில் அவர்கள் சொல்லிய காரியத்தில் ஒன்று நாம் அழைப்பு மணி அடிக்கும் போது நீங்கள் நேர்முகத்தேர்விற்காக உள்ளே வரவேண்டும் என்பதாக. அங்கு கூடியிருந்த பெண்களில் பலர் பலவிதமான பட்டப்படிப்புக்கள், வேலையில் பயிற்சி பெற்றவர்கள்... இப்படியாக பல பெண்கள் கூடி இருந்து தங்களை தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதில் ஓர் ஏழைக்கிறிஸ்தவ பெண்மணியும் ஜெபத்துடன் மணியோசை எப்போது கேட்கும் என்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

மிகவும் மெல்லிய சத்தத்துடன் அழைப்பு மணி அடித்தது. அனைவரும் பரபரப்பாய் தங்களுடைய காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அதனால் அந்த அழைப்பு மணி ஒருவருக்கும் கேட்கவில்லை. ஆனால் ஜெபத்துடன் அமைதியாக இருந்த ஏழைப் பெண் அந்த அழைப்பு மணி சத்தத்தையே கவனித்துக் கொண்டிருந்தபடியால் மணி ஓசை கேட்டவுடன் முதல் ஆளாக கதவைத் திறந்து உள்ளே சென்றுவிட்டாள். அதிகாரிகள் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்து: மணிஓசை உனக்கு மட்டும் எப்படிக் கேட்டது என்று கேட்டார்கள்? அவள் கொடுத்த பதில்: என்னுடைய சிறு வயதில் இருந்து என் அம்மா எனக்கு கற்றுக் கொடுத்த ஒரு காரியம், இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வரும் போது எக்காள சத்தம் தொனிக்கும். நீ ஆயத்தமாய் இருந்தால் தான் தேவனுடன் எடுத்துக்கொள்ளப்படுவாய், அல்லது நீ கைவிடப்படுவாய். எனவே நீ செய்ய வேண்டியது எப்பொழுது எல்லாம் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுகின்றதோ அப்போது எல்லாம் நீ கவனித்துக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதாக. இதனைக் கேட்ட அதிகாரிகள் ஆச்சரியப்பட்டார்கள். நீ மட்டுமே நேர்முகப் பரீட்சையில் தேர்ச்சி அடைந்திருக்கிறாய் என்றார்கள்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் சகோதரியே, கடந்த வருடம் நீ அதிக நேரம் உட்கார்ந்து நேரத்தை செலவழித்த இடம்

எது? தொலைக்காட்சிக்கு முன்பாகவா? உலகப் பெண்களுடன், ஏன் சிலவேளை விசுவாச பெண்களுடன் உட்கார்ந்து தேவையற்ற பேச்சுக்களை பேசுவதை நீயும் கேட்டுக்கொண்டிருந்தாயோ? கடந்த வருடம் நீ உன் காதினால் அதிகம் கேட்ட காரியங்கள் என்ன என்பதை சிந்தித்துப்பார்.

**2014ஆம் ஆண்டில் கால் எடுத்து வைத்திருக்கின்றாய். கையில் அனல் சஞ்சிகை உன்னை புத்தாண்டு வாக்குத்தத்தத்துடன் வரவேற்கிறது.** ஸ்திரியே நீ அநேக தீர்மானங்களை எடுத்திருப்பாய். ஆனால் இவ்வருடம் நீயும் லீதியாள் போல ஜெபம் பண்ணும் ஸ்திரிகளுடன் இருக்கவும், லீதியாள் போல தேவ மனிதர்கள் உபதேசிக்கும் இடங்களில் அமர்ந்து தேவ வார்த்தையை கவனித்து கேட்கவும் இருப்பாயானால் உன் இருதயமும் திறக்கப்படும். உன் குடும்பமும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றாயா? லீதியாள் மட்டும் கவனித்துக் கேட்டாள். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

> **"இவ்வருடம் நீயும் லீதியாள் போல ஜெபம் பண்ணும் ஸ்திரிகளுடன் இருக்கவும், லீதியாள் போல தேவனுடைய மனிதர்கள் உபதேசிக்கும் இடங்களில் அமர்ந்து தேவ வார்த்தையை கவனித்து கேட்கவும் இருப்பாயானால் உன் இருதயமும் திறக்கப்படும்.**

இவ்வருடம் உன் குடும்ப அங்கத்தவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமானால் நீ லீதியாள் போல உட்கார்ந்து கவனித்துக் கேள். அது மட்டும் அல்ல, லீதியாள் வீட்டிலே தேவ மனிதர்களை வந்து தங்கும்படி வருந்தி கேட்டுக்கொண்டாள். தேவ மனிதர்களுடன் உன் ஐக்கியம் இவ் வருடம் அதிகமாய் இருக்கட்டும். இவ் வருடம் நீ அதிகம் காணப்பட வேண்டிய இடம்: பெண்கள் கூடி ஜெபிக்கின்ற இடம். நீ அதிகம் உட்கார்ந்து இருக்க வேண்டிய இடம்: தேவ வார்த்தை உபதேசிக்கும் ஸ்தலம். உன் வீட்டிற்கு நீ வருந்தி அழைக்க வேண்டியவர்கள் தேவனுடைய மனிதர்களே. அப்போது உன் வீடு 2014ஆம் ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு குட்டி பரலோகமாய் காணப்படும்.

திருமதி. J.பிலிப்

*"சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்"*

*- ஏசாயா 12:6 -*

# பாரம் சுமக்கும் ஆத்துமாவே;
## பரமனிடமிருந்து ஓர் செய்தி!






**மத்தேயு 11:28 வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் (இயேசு) உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

இவ் அழைப்பானது பரலோக தேவனிடமிருந்து மானிடனிற்கு கொடுக்கப்படும் ஓர் நல்ல செய்தியாகும். நாம் வாழும் உலகை சற்று நோக்கும் போது: மனிதர்கள் பல விதமான நோவுகளோடு, வேதனைகளோடு மட்டுமல்லாது வாழ்க்கையில் ஏற்பட்ட பல துன்பங்கள், உடைவுகள, தாங்க முடியாத துயரங்களோடு, பலவிதமான வியாதிகளின் தாக்கங்களினால் மனம் உடைந்து, என்ன செய்வது என அறியாது போராடும் அதே நேரத்தில்...

தங்கள் சொந்த மனித சுபாவங்களினாலும், மனித எண்ணங்களினாலும் விரும்பிச் செய்த கொடிய பாவங்களும் மனித இதயங்களை உடைத்து ஆத்துமா பாரம் அடைந்து தவறான முடிவுகளை நோக்கி அனேகர் செல்வதை நாம் அவதானிக்க முடியும். இது நம் நாட்டில் மட்டுமல்ல, எத்தனையோ மைல்கள் கடந்து, நாடு கடந்து, கடல் கடந்து வாழும் மனிதர்களுடைய வாழ்க்கையிலும் இவ்விதமான நிலை தான் காணப்படுகிறது. அனேகருடைய இறுதி முடிவு மரணம்!.

> 66
>
> **இவ் வார்த்தை பல ஆயிரம் மக்களிற்கு உயிர் கொடுத்துள்ளது. ஆகவே இப் புதிய ஆண்டில் உங்களை நோக்கி வரும் இவ் அழைப்பை ஏற்று புதிய தீர்மானத்திற்குள் கடந்து வாருங்கள்.**

*ஒரு நண்பர் தன் சாட்சியை சொல்லும் போது, இவ்விதம் கூறினார்: இவர் நல்ல ஒரு வர்த்தகர். பல காலம் நன்றாக போய்க்கொண்டிருந்த வர்த்தக நடவடிக்கை திடீரென்று குழம்பி பயங்கரமான இழப்பு, தோல்வி மட்டுமல்ல, குடும்பத்தில் பலவிதமான குழப்பம், சண்டை, பிளவு. இவற்றை ஈடு செய்ய பல முயற்சிகளில் ஈடுபட்டார்*

முடியவில்லை. இறுதியாக வாகனத்தில் ஏறி எங்காவது போய், மோதி உயிரை மாய்த்து விடுவோம் என்ற எண்ணத்தில் ஓடிக் கொண்டு இருந்தார். தான் நம்பிய தொழில், நம்பிய குடும்பம், நம்பிய தெய்வங்கள் அனைத்தும் கைவிட்டுவிட்டதே இனி வாழ்ந்து என்ன பலன் என எண்ணி வேகமாக ஓடியவர், திடீரென தன் வாயைத் திறந்து உரத்த சத்தமாய் உண்மையான கடவுள், தெய்வம் என்று ஒன்று இருந்தால் எனக்கு உதவி செய்யுங்கள் என்று கத்திய பொழுது ஓர் ஒளி அவர் ஓடிய காரிற்குள் கடந்து வந்து அவரை அடித்தது. வாகனம் எப்படி நின்றது என தெரியாது, ஓர் சத்தம்: நான் உன்னுடைய இயேசு!!!. அப்போது கொஞ்சம் கொஞ்சமாய் இருள் நீங்கி, ஆத்தும பாரம் நீங்கி ஒரு சமாதானம், சந்தோஷம் உருவாகியது. பின்னர் தன் வாழ்வை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டான பாவ மன்னிப்பை பெற்று சந்தோஷமான குடும்பமாக வாழ்கின்றார்.

அன்பு சகோதரனே, சகோதரியே இவ்வித நிலையில் நீ இன்று வாழலாம். இவ் அழைப்பு கிருபை நிறைந்த அழைப்பாக உன்னை நோக்கி வருகின்றது. நீ விசுவாசத்தோடு இதனை ஏற்று இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரிடம் வருவாயானால் அவர் உனக்கு இளைப் பாறுதல் தருவார். இவ் வார்த்தை பல ஆயிரம் மக்களிற்கு உயிர் கொடுத்துள்ளது. ஆகவே இப் புதிய ஆண்டில் உங்களை நோக்கி வரும் இவ் அழைப்பை ஏற்று புதிய தீர்மானத்திற்குள் கடந்து வாருங்கள்.

"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"

உங்கள் அன்பின்
**J.கிறேசியன்.**

# குறுக்கெழுத்துப் போட்டி – 58
# சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. அகிமாசி
06. காதேஸ்
09. திருப்தி
11. யாகேல்
12. சிதேக்கியா

**வலமிருந்து இடமாக**

02. ஆசேர்
03. சாமுவேல்
07. தர்தாக்
08. பாபிலோன்
10. கர்மேலின்
15. அதோனிபேசேக்

**மேலிருந்து கீழாக**

01. அகாஸ்வேரு
02. ஆசாப்
04. வேதபாரகன்
05. தேவந்தி

**கீழிருந்து மேலாக**

13. உசியா
14. தோவேக்கு
15. அகோலியாப்








அன்பின் அனல் வாசகர்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மலர்ந்திருக்கும் இப்புதிய ஆண்டு தொடக்கம் பக்தர்கள் பயிலகம் பகுதியில் புதிய தலைப்பின் கீழ் வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்கவுள்ளோம். தொடர்ந்தும் ஊக்கமாக இதனை படித்து உங்கள் வேதாக அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

## புதிய ஏற்பாட்டுத் திருச்சபை

## திருச்சபைக்கான திருமறையின் திட்ட அளவு

**எபிரேயர் 8:5 இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது: அப்படியே, மோசே கூடாரத்தை உண்டு பண்ணப்போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்.** மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே நீ எல்லா வற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்கு கட்டளையிட்டார். **திருச்சபையைக் கட்டுவதற்கு தேவன் நாம் பின்பற்றக் கூடியதான திட்டமான பிரமாணத்தைக் கொடுத்துள்ளார்.** எனவே எம் வாழ்க்கையையும் ஊழியத்தையும் குறித்ததான தேவ சித்தத்தைப் பற்றி அறியாமை உள்ளவர்களாய் இருக்க வேண்டியதில்லை.

தேவனும் **1கொரிந்தியர் 3:10 இல் அவனவன் தான் அதின் மேல் இன்ன விதமாய் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். என்றார்.** நாம் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல்என்பவற்றினால்கட்டலாம் **ஆனாலும் நாம் தேவனின் அக்கினிப் பரிசோதனைக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய பொருட்களினால் தான் கட்ட வேண்டும். 1கொரிந்தியர் 3:13-15** அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாளானது அதை விளங்கப்பண்ணும் ஏனெனில்அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். **அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்.**

ஒருவன் கட்டினது வெந்துபோனால் அவன் நஷ்டமடைவான். **இதன் நிமித்தமாக பரிசோதனையின் போது நிலைத்து நிற்கக்கூடியதும் கூலியைப் பெறக்கூடிய விதமாயும் நாம் கட்ட வேண்டும்.** எம் வேலை வெந்து போனால்

அந்த நாளின் அனுபவம் எப்படி பயங்கரமாக இருக்கும் எனப்பாருங்கள். **அவன் நஷ்டமடைவான். ஆகவே சரியான விதத்தில் கட்டவும், பரிசோதனையில் நிலைத்து நிற்கவும் தேவன் காண்பிக்க மாதிரியின் படி கட்ட வேண்டும்.** இதைத் தேவன் தன் வார்த்தையில் எடுத்துக் கூறியுள்ளார்.

## வேதமே சட்டம்

உபதேசத்தையும் கிறிஸ்தவ வாழ்க்கையையும் பொறுத்த மட்டில் வேதமே சட்டமாக, ஒழுங்கு முறையாக இருக்கிறது. **நாம் பின்பற்றக்கூடியதாக ஒரு பிரமாணமே இருக்கிறது.** அந்த தெய்வீக சத்தியம் வேதாகமத்திலே நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. **இந்தப் பிரமாணத்தைப் பின்பற்றுவது பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கல்லினால் கட்டுவதற்கு ஒப்பானது.** மோசே ஆசரிப்புக்கூடாரத்தைக்கட்ட ஆரம்பிக்கையில் தேவன் அவனைப் பார்த்துக் கூறியது: **மலையிலே உனக்குக் காண்பிக்கப் பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு - யாத்திராகமம் 25:40.**

மோசே தேவன் காட்டிய மாதிரியின்படி கட்டினான். **இது மிகவும் அவசியமானதாக இருந்தது. காரணம்:** ஆசரிப்புக்கூடாரமானது இயேசு கிறிஸ்துவுக்கும் அவரது திருச்சபைக்கும் அடையாளமாகும். **புதிய ஏற்பாட்டு காலத்து நமக்கு நிழல்களோடும், அடையாளங்களோடும் இப்போ சம்பந்தமில்லை.** ஆனால் உண்மையோடு தான் சம்பந்தமுள்ளது. உண்மை (நிலை) – நிச்சயம் உள்ளது. இதனால் தேவனுடைய வழிகாட்டுதலைப் பின்பற்றுவது எவ்வளவு அவசியமானதாகும். **தேவன் தன் திட்டத்தையும் வரிவடிவத்தையும் (வரைபடம்) வேதத்திலே தந்துள்ளார்.** எனவே இந்த வரைபுக்கு அமையவே திருச்சபையின் உள்ளான ஜீவியத்தையும், வெளியான அமைப்பையும் நாம் கட்ட வேண்டும். **இதுவே எப்போதைக்குமாக தேவனால் கொடுக்கப்பட்ட திட்ட அளவு.** ஒன்றிலும் பார்க்க அநேக புதிய விசுவாசிகள் நாம் எந்த சபையில் சேர்வது? **எது சரியான சபை?, அநேகவித சமயக் கோட்பாடுகள் உண்டே? எனக் கேட்கிறார்கள்.** இதற்கு ஒரே ஒரு சரியான பதில் மாத்திரமே உண்டு. **எல்லா வழிகளிலும் தேவனது உறுதியானதும், திட்டமான சட்டங்களை கைக்கொள்ளவும் அதற்கு கீழ்ப்படியவும் விரும்பிகின்ற சபையில் அங்கத்தவர்களாக வாருங்கள்.**

## வேதாகம திட்ட அளவு

நாம் வேதாகம திட்ட அளவினைத் தான் பின்பற்ற வேண்டும். **ரோமர் 6:17 முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்த தினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்.** இன்னொரு முக்கியமான வசனம் உண்டு: **கலாத்தியர் 6:16 இந்த பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக.** எமக்கு ஒரு தெய்வீக உபதேசம் உண்டு. அதை நாம் விசுவாசிக்க வேண்டும். அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். **அது தான் வேதாகமம்.**

முழு வேதாகமமும் எம் கிறிஸ்தவக் கோட்பாடும் பிரமாணமும் ஆகும். **வேதாகமமே எம் விசுவாசத்திற்கும், வாழ்விற்குமான சட்டமும் மாதிரியுமாம்.** அது தான் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம். **நிலைத்திருப்பதும் அது தான். 11தீமோத்தேயு 2:19 ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது: கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.** இதை உலகத்திலுள்ளதும் பாதாளத்தில் உள்ளதுமான எந்த வல்லமையும் அழிக்க முடியாது. **தீத்து 1:9 ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும்.** திருச்சபையில் ஒரு மூப்பனுடைய கடமை எதுவென்று கூறுகின்றது. ஆகவே உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்கிறவனாக இருக்க வேண்டும். **உண்மையான வசனம் – எம் மாறாத தெய்வீக வெளிப்பாடு.**

## தேவன் தன் வார்த்தையைக் கனம்பண்ணுவார்

கிறிஸ்துவின் ஆதி அப்போஸ்தலரைக் குறித்து **மாற்கு 16:20 அவர்கள புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.** பவுலின் நாட்களில் இக்கோனியா பட்டணத்திலே நிகழ்ந்ததைப் பாருங்கள். **அப்போஸ்தலர் 14:1,3 அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக..** இதே மாதிரியான சம்பவங்களை திரும்பவும் திரும்பவும் காணலாம். **அப்போஸ்தலர் 12:24 தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று. அப்போஸ்தலர் 19:20 இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.** தேவன் தன் சொந்தமான வசனத்தையே உறுதிப்படுத்துவார்.

இவர்கள் வேறு எதையாவது பேசி இருப்பார்களானால் இவர்களது பிரயாசம் விருதாவாகவே இருந்திருக்கும். **மோசே தேவனால் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படி வேலையை முடித்த பின் நிகழ்ந்ததைப் பாருங்கள். யாத்திராகமம 40:33-35 (33.) பின்பு, அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையும் சுற்றிப் பிராகாரத்தை நிறுத்தி, பிராகாரத்தின் தொங்குதிரையைத் தொங்கவைத்தான்: இவ்விதமாய் மோசே வேலையை முடித்தான். 34. அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது: கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. 35. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது. நாமும் உண்மையுள்ள வசனத்தை விசுவாசித்துக் கீழ்ப்படிந்தால் இதே காரியம் நடக்கும்.** பரிசுத்த ஆவியானவர் சபையையும் விசுவாசியையும் நிரப்புவார். **வார்த்தையை உறுதிப்படுத்த அற்புத அடையாளங்களை நடத்துவார்.** நாம் செய்ய வேண்டியது ஒன்றே: வேதாகம திட்ட அளவைக் கைக்கொள்ளுவதேயாகும். **தேவன் மிகுதியை நடப்பிப்பார்.**

*(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பருபன்)*

தொடரும்...

# குறுக்கெழுத்துப்போட்டி - 59

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களை தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
- நன்றி -

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | *** | | | 02 |
| | *** | | | | 03 | *** | *** | |
| | | *** | 04 | | | | *** | |
| *** | | | *** | *** | 05 | | | |
| *** | | | *** | *** | | | *** | |
| | | | *** | *** | *** | | 06 | |
| | | 07 | *** | | | 08 | | |
| | 09 | | | | | | *** | *** |
| 10 | *** | 11 | | *** | | | | 12 |

## இடமிருந்து வலமாக

01. இவனுடைய நாட்களில் பூமி பகுக்கப்பட்டது
04. எலியா திரும்பி வந்ததைப் பற்றி ஆகாபுக்குத் தெரிவித்தவன்
05. தன் கூட்டை கன்மலையில் கட்டினவன்
09. சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன்
11. இவன் திராட்சை ரசத்திலே தன் வஸ்திரத்தை தோய்ப்பான்

## வலமிருந்து இடமாக

02. இவன் சாலொமோனின் சம்பிரதி
03. ஆசா விக்கிரகங்களை இந்த ஆற்றண்டையிலே சுட்டெரித்தான்
08. செலொப்பியாத்தின் குமாரத்திகள் இவன் புத்திரரின் வம்சத்தாரை விவாகம் பண்ணினார்கள்
12. ஜெகர்சகதூதாவுக்கு யாக்கோபு வைத்த பெயர்

## மேலிருந்து கீழாக

01. ஏதோமிய ராஜாவாகிய பேலாவின் தகப்பன்
02. தெபொராள் அடக்கம் பண்ணப்பட்ட இடத்திற்கு இவ்வாறு பெயர் உண்டாயிற்று
05. மூடனுடைய வாய்க்கு ......... சமீபித்திருக்கிறது
06. தனக்கு தீவனமிருக்கிற இடத்திலே எருது கதறுமோ? என்று கேட்டவன்

## கீழிருந்து மேலாக


07. இது அக்கிரமம் செய்கிறவர்களின் பட்டணம்
08. ஜெபத்தில் ஸ்தோத்திரப்பாட்டைத் தொடங்கும் தலைவன்
09. எக்ரோனின் தேவன்
10. லோத்தானின் சகோதரி




# இயேசு எதற்காக?

## வேதப்பகுதி: ரோமர் 6:17–23

ஜீனியோ இயேசுவைக் குறித்து உதயனிடம் பேசினான். உடனேயே உதயன் இயேசுவைக் குறித்து எனக்கு ஏன் சொல்லுகிறாய்? நாங்கள் கிறிஸ்தவர்கள் அல்ல என்றான். நீ தவறுகளையும், குற்றங்களையும் தொடர்ந்து செய்யும் பழக்கம் உண்டா என்று ஜீனியோ கேட்டான். நான் பொய் சொல்வேன், கோபப்படுவேன், திட்டுவேன், சில நேரம் கீழ்ப்படியமாட்டேன், பொறாமையும் எனக்கு உண்டு என்றான் உதயன். இவைகள் தவறு என்று தெரியாதா என்று கேட்டான் ஜீனியோ. தெரியும், ஆனால் என்னால் முடியவில்லையே என்றான் உதயன்.



**அதனால்தான் இயேசுவைப் பற்றி உனக்குச் சொல்லுகின்றேன், இயேசுவை நீ விசுவாசித்தால் அவர் உனக்கு தவறு செய்யாமலிருக்க வல்லமை தருவார். அதனால் தான் என்னால் தவறு செய்யாமலிருக்க முடிகிறது என்றான் ஜீனியோ. நாம் எந்த மதமாகவும் இருக்கலாம், ஆனால் இயேசுவை ஏற்றுக் கொண்டால் தவறு செய்யாமல் வாழ முடியும்.**

**சிந்தனைக்கு:- நாம் பாவம் செய்யாமல் நல்லவர்களாக வாழ்வதற்கு உதவி செய்யவே இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தார்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – டிசம்பர் 31



# அருட்பணியாளர் சரிதை

## ஆஸ்வால்டு சேம்பர்ஸ்

### 1874 – 1917



## திருமறையின் வழியில்

நதியோரத்தில் குடியிருந்த பாம்பும் தவளையும் ஒற்றுமையாக வாழ்ந்திட பேச்சுவார்த்தை நடத்தி முடித்தன. அவையிரண்டும் நண்பர்களாகவே வாழ தீர்மானித்தன. எனவே, இந்த ஒற்றுமையை உறுதி செய்ய, இருவரும் சேர்ந்து நதியின் மறுகரைக்குச் செல்ல திட்டமிட்டன, பாம்பு தவளையைத் தூக்கிச் செல்ல வேண்டும் என்பது நிபந்தனை.

இருவரும் புறப்பட்டனர். தவளை பாம்பின் வாயில் உட்கார்ந்து கொண்டது. மறுகரையை எட்டுவதற்குச் சிறிது தூரமே இருக்கும் போது, தவளையின் வாயும், கண்ணும் மட்டுமே வெளியே தெரிந்தது. அது துடித்துக் கொண்டே அண்ணா! நீ என்னை விழுங்கவா செய்கிறாய்? என்று பாம்பிடம் கேட்க, மற்ற எவ்விதத்திலும் நாம் சேர்ந்து வாழ வழியில்லையே என்று சொல்லிக் கொண்டே பாம்பு தவளையை விழுங்கிவிட்டது. அன்பு, ஐக்கியம், ஒற்றுமை என்ற வார்த்தைகளை நாம் அடிக்கடி பேசுகின்றோம். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் உண்மையாகவே அவைகளைக் கடைப்பிடிக்கிறோமா?

*1874ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தில் பிறந்த ஆஸ்வால்டு சேம்பர்ஸ் இளம் வயதிலேயே சார்லஸ் ஸ்பர்ஜன் அவர்களின் பிரசங்கத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டார். எடின்பரோவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது, ஆண்டவரின் அழைப்பிற்குத் தன்னை அர்ப்பணித்தார். பின்னர் இறையியல் பயிற்சி பெற்று 1906*

– 1910ஆம் ஆண்டு வரை அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வேதத்தின் சத்தியங்களைத் தெளிவுற பிரசங்கித்தார்.

**அன்பு, ஐக்கியம், ஒற்றுமை இன்றி வாழ்ந்த மக்களை கிறிஸ்துவின் வார்த்தையால் ஆவியின் கனி உடையவர்களாக மாற்றினார்.** 1910ஆம் ஆண்டு இவருக்குத் திருமணம் ஆனது. 1911ஆம் ஆண்டு வேதாகம கல்லூரி ஒன்றை ஆரம்பித்தார். ஆனால் முதல் உலகப் போரினால் அக் கல்லூரி இடையிலேயே மூடப்பட்டது. 1915ஆம் ஆண்டு எகிப்திற்குச் சென்று ஊழியம் செய்தார். இவர் ஒரு புத்தகம் எழுதியிருந்தாலும் இவர் பெயரில் அநேக புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தின தியானம் ஒன்றும் இதில் அடங்கியுள்ளது.

**அன்பரே! அன்பு, ஐக்கியம், ஒற்றுமை போன்றவை ஏற்பட பிரயாசப்படுவீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உணவினால் உடலை வளர்ப்பது போல, ஜெபத்தினால் உங்கள் ஐக்கியத்தை வளருங்கள்.**

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" நவம்பர் 15

# ஜான் வில்லியம்ஸ்

## 1796 – 1839

## உயிரோடே தின்றாலும்



இங்கிலாந்தின் மகாராணி மேரி என்பவர் தன்னுடைய கோடை காலத்தை ஸ்காட்லாந்து தேசத்தில் கழிப்பது வழக்கம். அச் சமயங்களில் அவர் தனிமையில் பல இடங்களுக்கு உலாவச் செல்வதுண்டு.

ஒரு நாள் மாலை, அவர் இப்படி உலாவிக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக மழை வந்துவிட்டது. அருகிலிருந்த வீட்டிற்குச் சென்று அங்கிருந்த பெண்மணியைப் பார்த்து, தயவு செய்து ஒரு குடை கொடுப்பீர்களா? நாளைக்கு நான் அதைத் திருப்பி அனுப்புகிறேன் என்று கேட்டார்கள். அப் பெண் தெரியாத ஒருவருக்குத்

தன்னுடைய நல்ல குடையைக் கொடுக்க மனமற்றவராக, தன் வீட்டில் உபயோகமற்று வைத்திருந்த பழைய குடையை எடுத்துக் கொடுத்தாள். அது கம்பி உடைந்தும், துணி கிழிந்து போயும் இருந்தது. அக் குடையைப் பெற்றுக் கொண்டு மேரி அங்கிருந்து கடந்து சென்றார்.

அடுத்த நாள், போர்வீரன் ஒருவன் அவ் வீட்டின் முன் வந்து ராணி அக்குடையை கொடுக்கச் சொன்னதாக அவ்வம்மையாரிடம் திருப்பிக் கொடுத்தான். ராணியின் கடிதத்தை பார்த்தவுடன், அப் பெண், ஐயோ! அது ராணி அம்மாவா, அப்படியானால் என்னிடமிருந்த நல்ல குடையைக் கொடுத்திருப்பேனே என்று தன்னை நொந்து கொண்டாள்.

*"பாலிநேசியாவின் அப்போஸ்தலன்" என்று அழைக்கப்படும் ஜான் வில்லியம்ஸ் தன்னிடத்திலிருந்த சிறந்த வெகுமதியாகிய இதயத்தை இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். 1817 ஆம் ஆண்டு, லண்டன் மிஷனெரி சங்கத்தின் மிஷனெரியாக ஐஸ்லேண்ட் தீவுகளுக்குச் சென்றார்.*

*அங்கே ரடோடாங்கா என்ற புதிய இடத்தைக் கண்டு பிடித்து, 1823ஆம் ஆண்லிருந்து அங்கு ஊழியம் செய்தார். அம்மொழியில் வேதாகமத்தின் சில புத்தகங்களை மொழி பெயர்த்து வெளியிட்டார்.* **பின்னர் இங்கிலாந்திற்கு சென்று அங்கிருந்த புதிய தீவுக்கு செல்ல முற்பட்கையில் நியூஹைப்ரடீஸ் என்ற அவர் அறியாத தீவுக்குள் இறங்கினார். அக் கொடூரமான மக்களோ ஜான் வில்லியம்ஸைப் பிடித்து, உயிரோடே சாப்பிட்டனர்.** *இவர் எழுதிய பாலிநேசியாவைப் பற்றிய தகவல் ஏடு இவரின் ஊழியங்களை விவரிக்கின்றது.*

**அன்பரே! புதிய இடங்களுக்குச் சென்று மக்களைப் புதுசிருஷ்டியாக்க முனைவீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: தேசத்தை விட்டுக் குடிபோவது என்பது, கர்த்தரிடத்தில் குடிபுகுவது ஆகும். — வேதாகம நண்பன்**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" நவம்பர் 20*

குறிப்பு:-

**அன்பின் வாசகர்களே! இப் புதிய ஆண்டிற்குரிய சந்தாவைப் புதுப்பித்துக் கொள்வதை மறந்து விடாதீர்கள்!**

## வினாவிடை - 60
rhpahd gjpy;fs;

01. பார்வோன் - யாத்திராகமம் 12:32
02. சூலமித்தியாள் - உன்னதப்பாட்டு 1:6
03. நாகமான் - 11இராஜாக்கள் 5:1-15
04. புபிலியு - அப்போஸ்தலர் 28:8
05. யாக்கோபு - ஆதியாகமம் 31:40
06. ரெபெக்காள் - ஆதியாகமம் 25:21-22
07. கர்த்தர் - ஆதியாகமம் 12:3
08. யோராம் - 11நாளாகமம் 21:1-20
09. சேரா - ஆதியாகமம் 38:26-30
10. ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நிற்கிறவர்கள்-வெளி 7:9,13-17

## குறுக்கெழுத்துப் போட்டி - 58
### சரியான பதில் எழுதியவர்கள்

01. எம்.கிறேரா - நாவற்குழி.
02. ச.யோகேஸ்வரி - மீசாலை
03. எஸ்.மாக்கிறட் - மீசாலை
04. எஸ்.சனோஜா - மீசாலை
05. அ.எஸ்தர் - காரைநகர்
06. அ.கம்சிகா - காரைநகர்
07. த.சிவாஜினி - காரைநகர்
08. அ.துர்க்கா - காரைநகர்
09. அ.கிருசாந்தன் - காரைநகர்
10. வி.ஜெயாழினி - பாண்டவெட்டை
11. வி.துயாழினி - பாண்டவெட்டை
12. செ.மேகலா - காரைநகர்
13. நா.கிறிஸ்தீனா - காரைநகர்
14. நா.சிவபாக்கியம் - காரைநகர்
15. எம்.பிரான்சிஸ் - மானிப்பாய்
16. பி.கஸ்தூரி - மானிப்பாய்
17. இ.சுவேந்தன் - மீசாலை
18. இ.சுரேகா - மீசாலை

2014 Happy New Year

# அனலின் புத்தாண்டு 2014 வாக்குத்தத்தச் செய்தி

## இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்!

**"சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்."**

**- ஏசாயா 12:6 -**

**அன்பிற்குரிய அனல் வாசகர்களுக்கு! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் மலர்ந்திருக்கும் இவ் "2014 ஆம் ஆண்டில் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை" தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.**

தேவ கிருபையில், தேவ தயவில் இன்னொரு வருடத்தைக கடக்க ஆண்டவர் கிருபை செய்திருக்கின்றார். பிறந்த நாட்கள் வருகின்ற போது, வயது கூடிக்கொண்டு போக மரண நாள் நெருங்குகின்றது, என்று கூறுவதை நாம் கேட்டிருக்கலாம். அதே போல வருடங்கள் உருண்டோட ஆண்டவர் இயேசுவின் வருகையும் சமீபித்துக் கொண்டிருக்கின்றது. *2013* ஆம் ஆண்டிலே திருச்சபையாக **அப்போஸ்தலர் 18:10 "நான்**

**உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை"** என்ற வார்த்தையை கொடுத்தார். **"இது தேவவார்த்தை"** ஆண்டவர் தான் கொடுத்த வார்த்தையிலே உண்மையுள்ளவர் என்பதனை நிரூபித்தார். திருச்சபையாக நான் சொல்லக்கூடியது; எத்தனையோ பேர் கைபோட பார்த்தார்கள் ஆனாலும் ஆண்டவர் தமது வாக்குத்தத்தத்தைவிட்டு மாறவே இல்லை – அவருடைய நாமம் மகிமைப்படுவதாக.

இந்த மலர்ந்திருக்கும் புத்தாண்டிலும்நமக்கு ஆண்டவர் <u>ஏசாயா 12:6 "சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்."</u> என்ற வார்த்தையை வாக்குத்தத்தமாக கொடுக்கின்றார்.

சீயோனிலே வாசமாயிருக்கிறவளே! என்றால்; **"மணவாட்டி அல்லது திருச்சபைக்குரிய வார்த்தை".** ஆகவே ஆண்டவா தமது மணவாட்டியை பார்த்து; திருச்சபையை பார்தது சொல்லுகின்றார்: **"சந்தமிட்டுக் கெம்பீரி".** அது மட்டுமல்ல பரிசுத்தமுள்ள பெரிய தேவன் அவர், அண்ட சராசரங்களையும் படைத்த வல்லமை பொருந்திய அவரால் ஆகாதது என்று ஏதும் இல்லை. **அவர் நடுவினிலே இருக்கும் போது எல்லாம் அதினதின் காலத்தில் நேர்த்தியாக தானாகவே நடக்கும்; எந்தக் குறைவும் இல்லாமல் பார்த்துக் கொள்வது பெரிய வரது கடமை.** ஆனால்பெரியவா இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால்; முதலாவது அவர் நம் மத்தியில் இருக்க வேண்டும்.

> **"திருச்சபையாக நான் சொல்லக்கூடியது: எத்தனையோ பேர் கைபோட பார்த்தார்கள் ஆனாலும் ஆண்டவர் தமது வாக்குத்தத்தைவிட்டு மாறவே இல்லை – அவருடைய நாமம் மகிமைப்படுவதாக.**

அவர் பரிசுத்தமுள்ளவர். ஆகவே அவர் வாசம் பண்ணும் இடமும் பரிசுத்தமுள்ளதாகவே இருக்கவேண்டும். புறா சுத்தமான இடத்தில் தான் தங்கும்; பரிசுத்தாவியானவர் புறாவிற்கு ஒப்பிடப்படுகின்றார். எனவே கறை, திறை பிழையற்றவர்களாக, பாவத்தை காணாத சுத்தக் கண்ணன் நம்மிடம் வாசம்பண்ணும் மணவாட்டிகளாகிய நாம் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார். மாறாகபாவத்துடன் பரி சுத்தமில்லாமல், மாம்சத்திற்குரிய அசுசித்தனங்கள் நம்மி

டத்தில் காணப்பட்டால நிச்சயமாகவே அந்த பரிசுத்த முள்ளவர் நம்மில் வாசம்பண்ணவே முடியாது. அவர் வாசம பண்ணமுடியாவிட்டால் பெரியவராய் நமக்காக பெரும் காரியங்களையும்அவர்செய்ய முடியாது. **இந்த புதிய ஆண்டில் பெரும் காரியங்களை ஆண்டவரிடமிருந்து எதிர் பார்க்கின்றீர்களா? முதலாவது மணவாட்டியாக உங்கள் வாழ்க்கை சுத்தமாக்கப்பட வேண்டியது அவசியம்.**

வேதாகமத்தில் இருந்து இரண்டு சம்பவங்களை அவதானித்து அச் சம்பவங்களில் பரிசுத்தராகிய ஆண்டவர் பெரியவராய் செயற்பட்ட அற்புதங்களை அவதானிக்கலாம்.

> “”
> **இந்த புதிய ஆண்டில் பெரும் காரியங்களை ஆண்டவரிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்களா? முதலாவது மணவாட்டியாக உங்கள் வாழ்க்கை சுத்தமாக்கப்பட வேண்டியது அவசியம்.**

01.

**மாற்கு 10:46-52** வரையான வசனங்களில் அநேகருக்கு தெரிந்த ஒரு சம்பவம்: பார்த்திமேயு என்கின்ற குருடன் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். குருடன் - Blind ஒளி இழந்தவன், உலகில் வெளிச்சம் மறைக்கப்பட்டவன். வாழ்க்கையின் அடுத்த அடி என்ன என்பது தெரியாமல் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்றான். சில வேளை இந்த குருடன் போல எதிர் காலம் இல்லாமல் இந்த வருடம் எனக்கு எப்படி அமையுமோ என்று பல யோசனைகளுடன் கலங்கிக் கொண்டிருக்கலாம். **மாற்கு 10:47 அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான்.** பெரியவராகிய இயேசு அவ் வழியே வருகின்றார் என்று கேள்விபடுகின்றான். பெரியவர் வருகின்றார், என்பதை அறிந்தவன்; அவர்தேவ குமாரன் என்பதை அறிக்கை பண்ணி அவரால் எனக்கு எதிர் காலம் தர முடியும் என்று அவர் மேல் நம்பிக்கை வைத்து அவரை வருந்தி அழைக்கின்றான். **மாற்கு 10:48 அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின குமாரனே, எனக்கு இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்.** ஆனால் ஜனங்கள் அவனை அதட்டுகின்றார்கள், அவனுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றார்கள். **யார் இதைச் செய்கின்றார்கள்? பார்வை இருந்து எல்லாம்**

அறிந்தவர்கள்/வெளிச்சத்தில் நடப்பவர்கள். இந்த அதட்டுகின்ற பார்வையுள்ள ஜனங்களை பார்க்கிலும் ஆண்டவர், தேவகுமாரன், அவர் பெரியவர் என்பதை அறிந்து தைரியமாக சத்தமிட்டுக் கூப்பிடுகின்றான். **அந்த குருடனின் சத்தம் எல்லா அதட்டல்களையும் தாண்டி பெரியவரது காதுகளில் கேட்டது.**

பிரியமான தேவ ஜனமே; திரளானபேர்முட்டுக்கட்டையாக, அதட்டுகின்றவர்களாக உங்களுக்கு இருந்தாலும் நீங்கள் ஒண்டியாக விசுவாசத்துடன்; பெரியவர், அவர்என்பதை உணர்ந்து கூப்பிடுவீர்களாக இருந்தால், எல்லாத் தடைகளையும் தாண்டி உங்கள் கூப்பிடுதல் நிச்சயம் அவர் சந்நிதியில் எட்டும். கூப்பிடுகிறவனுடைய சத்தத்தைக் கேட்டு அவர் கடந்து போகின்றவர் இல்லை. மாறாக அவர் நின்று; **மாற்கு 10:51 இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்த குருடன்: ஆண்டவரே. நான் பார்வையடைய வேண்டும் என்றான்** இயேசு அவனைப் பார்த்து கேட்கின்றார் உனக்கு என்ன வேண்டும்? அவனுக்கு இயேசு செய்ய வேண்டிய காரியங்கள் அநேகம் இருந்திருக்கலாம், பெரிய பட்டியல் போட்டு; வீடு, வாகனம், சொத்து, காணி, பணம் என்று கேட்டிருக்கலாம். **ஆனால் பெரியவராகிய அவரிடம்அவன்தனக்கு வேறு எவராலும் தர முடியாத பார்வையை கேட்டான்: அவன் கேட்டபோது பரிசுத்தமுள்ள பெரியவர் மறுக்காமல் கொடுத்தார்.** பரிசுத்தமுள்ள பெரியவர் நடுவில் இருக்கும் போது பெரிய காரியங்களை, மனிதனால் முடியாதவற்றை தைரியத்துடன் கேட்கும் போது; நாம் கறை, திறை, பிழையற்ற மணவாட்டியாக இருந்தால் **நிச்சயம் நமக்காக தான் யார் என்பதை நிரூபிக்க அவர் செய்வார்.**

**பரிசுத்தமுள்ள பெரியவர் நடுவில் இருக்கும் போது பெரிய காரியங்களை, மனிதனால் முடியாதவற்றை தைரியத்துடன் கேட்கும் போது; நாம் கறை, திறை, பிழையற்ற மணவாட்டியாக இருந்தால் நிச்சயம் நமக்காக தான் யார் என்பதை நிரூபிக்க அவர் செய்வார்.**

**02.**

**மாற்கு 4:35-41 (35.) அன்று சாயங்காலத்தில், அவர்**

**அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்.** இது ஆண்டவர் இயேசு தாமே சொன்ன வார்த்தை. நான் உன்னைக் கைவிடுவதில்லை, நான் உன்னை உயர்த்துவேன்... போன்ற இயேசுவின் வார்த்தைகளைப் போல சீஷர்களை நோக்கி இந்த வார்த்தையை அவர் சொன்னார். இதை ஓர் வாக்குத்தத்தம் போல எடுத்துக் கொண்டால், அக்கரைக்குப் போவோம் என்று இயேசு தாமே கூறினார். தேவனுடைய வாக்கு பொய்யாகாது, அவர் கூறினால் அதை நிறைவேற்ற வல்லவர். இயேசு அக்கரைகரு போவோம் வாருங்கள் என அழைத்தது அவர்கள் அக்கரைக்கு போய் சேர்ந்ததற்கு சமன். காரணம், அவர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராய், அதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். எனவே இந்த சீஷர்கள் இயேசு கூறிய வார்த்தையின்படி படவில் ஏறி போகும் போது: **மாற்கு 4:37-38 (37.) அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. 38. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே. நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள்.** பலத்த சுழல் காற்று, சீஷர்கள் திணறுகின்றார்கள். அந்த பொழுதிலே இயேசுவின் வார்த்தை நிறைவேறாமற் போய்விட்டது போல தோன்றியிருக்கும். அக்கரையை நாம் அடைய முடியாது என்று அவர்கள் நினைத்திருக்கலாம். அந்த பயங்கரமான, எல்லாம் முடிந்தது போன்ற நிலைமையில் இயேசு: **மாற்கு 4:39 அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று.**

> “
> தேவனுடைய வாக்கு பொய்யாகாது, அவர் கூறினால் அதை நிறைவேற்ற வல்லவர். இயேசு அக்கரைக்கு போவோம் வாருங்கள் என அழைத்தது அவர்கள் அக்கரைக்கு போய் சேர்ந்ததற்கு சமன். காரணம், அவர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவராய், அதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்.

அன்பார்ந்தவர்களே, வாழ்க்கைப் பாதையின் சூழ்நிலைகளைப் பார்த்து, ஆண்டவர் சொன்ன வாக்குத்தத்தங்

கள் நிறைவேறாதது போல ஒருவேளை நீங்கள் தள்ளாடிக் கொண்டிருக்கலாம், அல்லது சோர்ந்து போய் இது நடைபெறாது இனி பயனில்லை என்றும்கலங்கி, அதைரியப்பட்டு இருக்கலாம். எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும் மணவாட்டி திருச்சபையே; சீயோன் குமாரத்தியே, அதைரியப்பட வேண்டாம். பரிசுத்தமுள்ள பெரியவர் உன் நடுவில் இருப்பாராகில் அவர் வல்லமையான பெரிய காரியங்களை செய்வார்.

> "
> எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும் மணவாட்டி திருச்சபையே; சீயோன் குமாரத்தியே, அதைரியப்படவேண்டாம். பரிசுத்தமுள்ள பெரியவர் உன் நடுவில் இருப்பாராகில் அவர் வல்லமையான பெரிய காரியங்களை செய்வார்.

மணவாட்டியாக நாம் இருந்தால் அவர் நம்மத்தியில் இருப்பார். அவர் நம்மத்தியில் இருப்பாரேயாயிருந்தால்; நம்முடைய வாழ்வில் அனைத்தும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும். **ரோமர் 8:28 அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**

*எனவே மலர்ந்திருக்கும் இப் புத்தாண்டில்; பரிசுத்தமுள்ள பெரியவர் உன் நடுவில் என்பதை நீ உறுதிப்படுத்துவாயானால், அவர்உனக்காக பெரிய காரியங்களை இந்த ஆண்டில் செய்யவல்லவர்.*

**ஏசாயா 12:6 "சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்த மிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்".**

"ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"

**போதகர் ஜோஹணன் டி.பிலிப்**

**"சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்".**

**- ஏசாயா 12:6 -**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள்
உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் :- ..........................................................

விலாசம் :- ..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.




To:........................................................................

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**